தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௲௰	மலர்
	சௌமிய, ஆவணி	
ச௩	1969–ஆகஃசுடு-செப்டம்பர்	௫

(சென்ற இதழின் தொடர்ச்சி)

செயப்பாட்டு வினை

திரு. S. அகத்தியலிங்கம், எம்.ஏ.பிஎச்.டி. (கோனா), பிஎச்.டி. (இந்தியானா)

மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

169. நம்மால் சொல்லப்பட்டது 170. நம்மால் (ஏசு) எனப்படுபவர் 171. நம்மால் (நன்னூல்) எனப்படுவது 172. நம்மால் எழுதப்பட்டது 173. நம்மால் படிக்கப்பட்டது என்பவை இலக்கண நெறியுடையன.

174 *நாம் சொல்லப்பட்டது 175. *நாம் (ஏசு) எனப்படுபவர் 176. *நான் (நன்னூல்) எனப்படுவது 177. *நாம் எழுதப்பட்டது 178 *நாம் படிக்கப்பட்டது என்பவை இலக்கணப் பிழையுடையன.

179 கதவு அடைத்தது 180. கதவு திறந்தது 181. காய்கறி விற்றது போன்றவற்றையும் செயப்பாட்டு வினையாகக் கருதுகின்றனர் பலர்[1]. பொதுவாக இவ்வாக்கியங்களும் முறையே

the door was closed, the door was opened, the vegetable was sold

என மொழி பெயர்க்கப்படுதல் காணலாம். இம்மொழி பெயர்ப்பை வைத்து இவற்றைச் செயப்பாட்டுவினை எனக்

1· Jothimuthu, 1965, p. 96
டாக்டர் மு. வ. 1958, ப 235.

கருதுதல் கூடாது.[1] முன்னர்க் காட்டியது போன்று இவ் வாக்கியங்களின் எழுவாய் "ஆன்" வேற்றுமையில் இல்லை. மேலும் இவை

182 கதவை அடைத்தான் 183. கதவைத் திறந்தான் 184. காய்கறியை விற்றான்

போன்ற செய்வினை வாக்கியங்களிலிருந்து உருவானவை அல்ல. தமிழ் இலக்கண அறிஞர்களிடையே தோன்றும் இம்மயக்கத்துக்குக் காரணம் திற, அடை, வில் போன்ற வினைச் சொற்கள் பிறவினைச் சொற்களாக மாத்திரமே வரும் என எண்ணுவதுதான். "வெளு" போன்ற ஓரிரு வினைச் சொற்களைத் தன் வினையாகவும் பிறவினையாகவும் கொள்ளும் தமிழ் இலக்கண அறிஞர்கள் திற, அடை வில் போன்றவற்றை இவ்வாறு கொள்ளத் தயங்குகின்றனர்.

185. அவன் வெளுத்தான் 186. அவன் துணி வெளுத்தான்

போன்ற வாக்கியங்களில் எவ்வாறு "வெளு" என்ற வினை தன்வினையாகவும் பிறவினையாகவும் பயன்படுகிறதோ அது போன்றே திற, அடை, வில் போன்ற சொற்களும் பயன்படுகின்றன,[2] இந்நிலையை ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் காணலாம். ஆங்கில மொழியில்

the door closes well, the door opens well, the book sells well

போன்ற வாக்கியங்களைக் காணமுடியும். எனினும் ஆங்கில மொழியில் இவற்றைச் செயப்பாட்டுவினை எனக்

---

1. ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழியில் மொழி பெயர்க்கும்போது ஒரு இலக்கணக் கூறில் வருவதை சில நேரங்களில் இன்னொரு இலக்கணக் கூறாக மொழி பெயர்ப்பதைக் காணலாம். இதனால் ஒன்றை இன்னொன்றாகக் கருதுதல் கூடாது. இந்நிலையை உணர்ந்த ஜெர்பர்ஸன் "the circumstance that Lat. *vapulo* in other language is translated by a passive does not alter its grammatical character as an active; and Gr. apothne: skei is just as active when we render it 'is killed' [thus when it is followed by *hupo* 'by'] as when we simply say 'dies'. There is thus nothing in the ideas themselves to stamp verbs as active or passive" எனக் கூறுதல் காண்க.
Jespersen, 1955, p. 165.

2. ஆறுமுக நாவலர், 1952, ப. 40–41.
தேவநேயப் பாவாணர், 1945, ப. 116-117.

கருதுவதில்லை[1]. இவ்வினைச் சொற்களைத் தன்வினையாகவும் பிறவினையாகவுமே கொள்ளுகின்றனர் ஆங்கில இலக்கண அறிஞர்கள். இவற்றைப் போன்று

கதவைத் திறந்தான் (183 கதவை அடைத்தான் (182) காய்கறி விற்ருன் (184)

போன்ற இடங்களில் இவை பிறவினையாகவும்

கதவு திறந்தது (180) கதவு அடைத்தது (179) காய்கறி விற்றது (181) போன்ற இடங்களில் தன்வினையாகவும் வந்துள்ளன. இவற்றைத் தன்வினைச் சொற்கள் எனக் கொள்ளுவதில் தவறில்லை. இத்தகைய வினைச் சொற்கள் பலவற்றைத் தமிழ் மொழியில் காணலாம்,

187 தண்ணீர் சுடுகிறது 188. காற்று வீசுகிறது 189. நான் சிறிது தள்ளினேன் போன்ற வாக்கியங்களில் வரும் "சுடு", "வீசு", "தள்ளு" போன்ற வினைச் சொற்கள் இவண் தன் வினையாகவும்

190. அவன் சுட்டான் 191. அவன் வீசினுன் 192. அவன் (என்னைத்) தள்ளினுன். போன்ற இடங்களில் பிறவினையாகவும் வருதல் காண்க.

இந்நிலையில் இதுபற்றிக் கூறும்

"செயப்படுபொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே"

என்னும் தொல்காப்பியச் சூத்திரம் [2] ஆராய்தல் பாலது.

இதற்கு உரை எழுதப்போந்த நச்சினுர்க்கினியர் "ஒரு வினை முதல் ஒரு தொழில் செய்வதனை உறுவதாகிய பொருளைத்தான் அத்தொழிலைச் செய்த வினை முதல் போல அத்தொழில் அதன் மேற்படக் கூறுதலும் வழக்கின் கண்ணே நடக்கும் முறைமை" என்ருர். [3] அதாவது

1. இத்தகையவற்றை ஜெஸ்பர்சன் "notional passive" என்பார் இது சாதாரணமாக நாம் கருதும் செயப்பாட்டு வினையிலிருந்தும் மாறுபட்டது. ஒன்றை "syntactic passive" என்றும் மற்ருென்றை "notional passive" என்றும் கூறுவார் இவர்.
2. தொல். சொல். சேனுவரையம், 246.
3. தொல். சொல். நச்சினுர்க்கினியம், 248.

செயப்படு பொருளாக (ஐ வேற்றுமை) வரும் சொல்லை எழுவாயாக்கிச் சொல்லுதல் வழக்கின்கண்ணே உள்ளது என்பதாம். இதே கருத்தினைச் சேனாவரையரும் "செயப்படு பொருளைச் செய்த வினைமுதல் போலத் தொழிற்படச் சொல்லுதலும் வழக்கின்கண் இயலும் மரபு" எனக்கூறிப் போந்தார்.[1]

ஆனால் எடுத்துக்காட்டினைத் தரும்போது நச்சினார்க்கினியர் "இல்லம் மெழுகப்பட்டது". என்னாது "இல்லம் மெழுகிற்று என்றலாம்".[2] எனக் கூறுவது மயக்கத்தைத் தருவதாக உள்ளது. 'இல்லம் மெழுகப்பட்டது' என்பதில் இல்லம் எழுவாயாகவே உள்ளது. செயப்படு பொருளாக இல்லை. இதனால்தான் அஃறிணை முடிவைக்கொண்டுள்ளது. எனவே செயப்படு பொருளாக வரும் சொல்லுக்கு எடுத்துக் காட்டாக செயப்பாட்டுவினைச் சொற்களைத்தருவது பொருந்தா உதாரணமாகவே காணப்படுகிறது. இதற்குப் பதில் 'இல்லத்தை மெழுகினான் என்னாது இல்லம் மெழுகிற்று' என்று கூறலாம் என்பதே பொருத்தமாக உள்ளது.

193. இல்லத்தை மெழுகினான் — போன்றவற்றில் "இல்லத்தை" என்பது செயப்படு பொருளாக இருப்பதும் இதனை

193b. இல்லம் மெழுகிற்று — என்று கூறும்போது "இல்லம்" என்று 'ஐ' வேற்றுமைச் சொல் எழுவாயாக மாறுவதும் இவண் கவனித்தற்பாலது. அவ்வாறு மாறும்போது 'மெழுகு' என்ற பிறவினைச் சொல் 'மெழுகு' என்ற தன்வினைச் சொல்லாகப் பயன்படுதல் காணலாம். 'தன்னை மெழுகப்பட்டது என்பதையே "திண்ணை'' மெழுகிற்று" எனக் கூறுவர் எனக் கருதினமையால்தான் செயப்பாட்டு வினைப் பொருளில் செய்வினை வருகிறது என்ற கருத்தும் உருவாயிற்று. அடுத்து

194. எழுதியிருக்கிறது, 195. அடைத்திருக்கிறது' 196. அடைத்துள்ளது, 197. செய்திருக்கிறது, 198. செய்துள்ளது — போன்றவற்றைக் காட்டித் தமிழில் செய்வினையும் செயப்பாட்டு வினையும் ஒன்று என எண்ணுவாரும் உளர், இவை

---

1. தொல். சொல் சேனாவரையம், 246.
2. தொல். சொல். நச். 248.

199. எழுதப்பட்டிருக்கிறது, 200 அடைக்கப்பட்டிருக்கிறது, 201 அடைக்கப்பட்டுள்ளது.

போன்று "ஆன்" வேற்றுமைச் சொற்களை எடுப்பதில்லை. "அடைத்து", "திறந்து" என்ற சொற்களைப் போன்றே இவையும் தன்வினைச் சொற்களாக வந்துள்ளன என்பதில் தவறு எதுவும் இல்லை.

202 இதை எழுதியிருக்கிறான்

எனப் பிறவினையில் செயப்படு பொருளாக வந்த "இது" எழுவாயாக மாறும்போது வினையும் தன்வினையாக மாறி நிற்கும். பிறவினை, தன்வினை மாற்றமே யன்றி செயப்பாட்டு வினை — செய்வினை மயக்கமன்று என்பது வெளிப்படை.

REFERENCES

AGESTHIALINGOM, S

1964 "Auxiliary verbs in Tamil", *Tamil Culture,* XI
1965 "Structural ambiguities in Tamil"; *Indian Linguistics,* XXIV

ANDRONOV, M.

1959 "On the use of participles and participal nouns in Tamil". *Tamil Culture,* XVIII, 1965 *The Tamil language*. Moscow

ARDEN, A. H.

1955 *A progressive grammar of the Telugu Language* Madras.

ஆறுமுக நாவலர் 1952 இலக்கணக் கொத்து, சென்னை.

CALDWELL ROBERT

1956 *A comparative grammar of the Dravidian or South-Indian Family of languages,* Madras.

CHIDAMBARANATHAN CHETTIAR, A

1938 "The passive voice in Tamil", *Journal of the Annamalai University,* VII. 1939 "The passive voice in *Tamil Journal of the Annamalai University,* VIII.

CHOMSKY, NOAM

1965 *Aspects of the theory of syntax*, Cambridge, Mass

COLE, R. A.

1867 *An elementary grammar of the Coorg language*, Banglore.

தேவநேயப் பாவாணர்,

1954 இயற்றமிழ் இலக்கணம், சென்னை

HODSON, THOMAS

1864 *Canarese grammar*, Bangalore

ILAKKUVANAR, S.

1946 *Making of Tamil grammar*, Madras
1961 *Tamil language*, Madras

JESPERSEN, OTTO

1955 *The philosophy of grammar*, London

JOTHIMUTHU, P.

1965 *A guide to Tamil*, Madras

KATZ, J. J. and POSTAL, P.M.

1964 *An Integrated Theory or Linguistic Descriptions* Cambridge, Mass.

NICHOLS A. E.

1965 *English Syntax*, New York

SUBRAHMANYA SASTRI, P. S.

1945 *Tolkappiyam Collatikarm with an English commentary*, Annamalainagar

சுப்பிரமணிய பிள்ளை, கா.

1939 மொழிநூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும், சென்னை

வரதராசன், மு.

1959 மொழிநூல், சென்னை

(சென்ற இதழின் தொடர்ச்சி)

பத்திரிகை முதல்வர் திரு. வி. க.

திரு. சாலை இளந்திரையன், எம். ஏ., எம். லிட்., டிப் இன்-யூ. என். அய். யூ.

வகுப்புப்போர் சமரச நோக்குடைய பிராமணரையும் வேறுபடுத்தி விடும். அன்புமுறையால் எல்லாரையும் ஒன்று படுத்திக் குறைகளைக் களையப் புகுவதில் விளையும் நலன், வேறு முறையில் விளையாதென்பது திண்ணம். வகுப்புப் பிரிவால் நமது நாடு உற்ற அல்லல் போதாதோ? இன்னுமா அப்பிரிவை நிலைபெறுத்தவல்ல முறைகளைக் கையாள்வது? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தற்போது அமுதமாகத் தோன்றினாலும், பின்னை அது நஞ்சாக நாட்டை எரிக்கும் என்பது உறுதி. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு விதை விதைத்த டாக்டர் நாயர் முதலியோரும் "தற்காலம்" என்று கூறிப்போந்தது கருதற்பாலது. தற்காலம், தற்காலம் என்று எக்காலமும் அப்பாட்டைப் பாடிக்கொண்டிருத்தல், வகுப்புப் பிரிவை நிலைபெறுத்துவதோடு, வகுப்புப் பூசலையும் கிளப்பிக்கொண்டேயிருக்கும். ஆதலால் வகுப்புப் பிரிவை உண்டுபண்ணும் முறையில் கிளர்ச்சி செய்யாது, தாழ்த்தப் பட்ட மக்களுக்கு ஊக்கம் ஊட்டும் முறையில் கிளர்ச்சி செய்வது நலம்."[32]

வேதாந்திகள் வருக!

நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலம் அது. அந்த நிலையை மாற்ற விடுதலைக் கிளர்ச்சியைத் தலைவர்கள் நடத்தி வந்தார்கள். அந்த நோக்கத்தைத் தடம்பிரிக்கும் எந்தப் போக்குக்கும் இடந்தரலாகாது என்ற தடத்தில் சென்றது திரு. வி. க. வின் பார்வை. எனவே எந்த நிலையினரும், மற்றக் காரியங்களை மறந்தும் ஒதுக்கி வைத்துவிட்டும், நாட்டு விடுதலை முயற்சியில் ஒத்துழைக்கவேண்டும் என்பதைத் தமது பத்திரிகைகளின் மூலம் வலியுறுத்தி வந்தார் அவர்.

1919இல் ஆங்கில அரசாங்கம் ரௌலட் சட்டத்தை நிறைவேற்றியது. அதன் கொடுமையை உணர்ந்த அனைவரும் அதை வெறுத்தார்கள். தேசியத் தலைவர்கள்,

---

32. நவசக்தி: 11-12-1925

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறு நாட்டுமக்களைத் தூண்டினார்கள். திரு. வி. க. வும் அவ்வாறே செய்தார். நாட்டு மக்களின் ஒரு பகுதியினராகிய "வேதாந்த சித்தாந்த சந்நியாசிகளைக் கூட அவருடைய "தேசபக்தன்" விடவில்லை.

"வேதாந்திகள் எவருக்கும் அஞ்சவேண்டுவதில்லை. அவரை அலைக்க துன்புறுத்த எவராலும் இயலாது அவர்கள் பிர்மசொரூபமாகவிருப்பவர்கள். பிர்மசொரூபம் எத்தகைப் பீரங்கிப் படையாலும் அழிவுபெறாது. "நானே கடவுள்" என்று வாயால் பேசித் தேகத்தையும் பொன்னையும் மண்ணையும் பொருளாக்கொண்டு வாழ்வோர் சுயநலத்தை முன்னிட்டு இராஜாங்க காரியத்தில் தலையிடக் கூடாது என்று கூறிக்கொண்டு ஊரைக்கெடுத்து வருகின்றனர். பொதுஜனங்கள் சோற்றையும் பொருளையும் தின்று வாழ்ந்து வருவோர். அவர்களுக்குத் துன்பம் நேர்ந்த காலத்து, அத்துன்பத்தையொழிக்க ஏன் முன்வரலாகாது?

"நான் கடவுள், கடவுள் நான், நான் அதுவானேன், அது நான் ஆனேன்" என்று பேசி வார்த்தையில் சண்டை செய்யும் வேதாந்திகளும் சித்தாந்திகளும் ஏன் சிறை புகலாகாது? அவர்கள் வீட்டையும் சிறையையும் வேறாகக் கருதலாமோ? "சிறைவாசம் துன்பம்" "வீட்டுவாசம் இன்பம்" என்று கூறுவோன் "அகம்பிர்மாஸ்மி" என்னும் மகா வாக்கியத்தைப் பேசலாமோ?

"முப்பத்து முக்கோடி ஜனங்களையும் பாதிக்கப் பெருங் கார்இருள், மலைபோல் உருண்டு வருகிறது முப்பத்து முக்கோடி ஜனங்களின் பந்தத்தைப் போக்க முயலாது, திண்ணை வேதாந்தம் பேசும் வேதாந்த சந்நியாசியை என்னென்று கூறுவது? வட இந்தியாவிலுள்ள சந்நியாசிகளில் பெரும்பாலோர் ரௌலட் சட்டத்தை ஒழிக்க முன்வந்திருக்கின்றனர். மகாத்மா முன்ஷிராம், ரௌலட் சட்டத்தை நீறுபடுத்த, நிஷ்டை கூடியுள்ள சந்நியாசிகளையும் கூப்பிடுகிறார். அவரல்லரோ வேதாந்த சந்நியாசி?"[33]

'தொழிலாளிகள் வருக!'

படித்தவர் இயக்கமாக இருந்த காங்கிரஸ், மக்களின் மொழியைத் துணைக்கொண்டு, பாமரமக்களின் இயக்கமாக

33. தேசபக்தன் 20—3—1919

ஓரளவு மாறி வந்தது ஆயினும் தொழிலாளரை ஒரு சக்தியாகக் கருதி அவர்களைத் தன் பின்னால் திரட்டும் முயற்சியில் காங்கிரஸ் இயக்கம் போதிய கவனம் செலுத்தவில்லை.

நாட்டின் எதிர்காலம் தொழிலாளர் கையில் இருக்கிறது என்பதை உணர்ந்த திரு. வி. க., தொழிலாளரைத் தேசீய அணியின் மூலபலமாக்க வேண்டியதன் அவசியத்தை மக்கள் தலைவர்களுக்கு அடிக்கடி நினைவூட்டி வற்புறுத்தி வந்துள்ளார்.

"நமது நாட்டில் ஏழைத் தொழிலாளர்களே நிரம்பியிருக்கிறார்கள். இவர் தம் முன்னேற்றத்துக்காக இதுகாறும் காங்கிரஸ்காரராதல் பிறராதல் உழைக்க முன்வந்தாரில்லை. ஏழைத் தொழிலாளரைக் கவனியாது சுயராஜ்ஜியக் கூச்சலிடுவதால் சிறிதும் பயன் விளையாது......தொழிலாளர்கள் முன்னேற்றத்தை நாடாதவர்களை நாம் தலைவர்களாகக் கொள்ள மாட்டோம். அவர்கள் செய்துவரும் வஞ்சகச் செயல்களை வெளியிடவும் யாம் துணிவு கொண்டுள்ளோம். ஏழைத் தொழிலாளர் பட்டினி கிடந்து வருந்த, ஜனத்தலைவர் என்னும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டு மோட்டார் வண்டியிலேறிச் சுகமாக உலவி வருவோரை ஜீவகாருண்ய மில்லா மிருகங்களெனக் கூறுது வேறென் கூறுவது? .....

"இந்தியாவின் முன்னேற்றத்துக்காக இப்பொழுது உழைக்க முன்வந்து நிற்கும் அன்னை பெசண்ட் அம்மையார் இங்கிலாந்தில் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்டு அனுபவம் பெற்றவர். அவ்வம்மையார் முதல் முதல் சென்னையில் தொழிலாளர் தலைவர்கட்கென ஒரு கூட்டங் கூட்டித் தொழிலாளர் முன்னேற்றத்துக்கு வேண்டிய முறைப்பாடுகளை ஒழுங்குபடுத்தி அக்கூட்டத்தவர்களை நடத்த முன்வருமாறு அம்மையாரைக் கேட்டுக்கொள்கிறோம். தொழிலாளர் கட்டத்தைத் திறம்பட நடத்தும் ஆற்றலும் அனுபவமும் அம்மையாருக்கு உண்டு என்பது உலகறிந்ததொன்றே. அம்மையார் எமது விருப்பத்தை நிறைவேற்ற அருள் புரிவாரென நம்புகிறோம்."[34]

34. தேசபக்தன்: 15—10—1918

வழிகாட்டுதல்

1918 இறுதியில் சென்னை பக்கிங்காம் கர்நாடிக் மில்களில் கதவடைப்பு நடந்தது. அதுவே தொழிலாளர் இயக்கத்தைப் போராட்டத்துக்குத் தூண்டிய முதல் கட்டம். முன்பு நாடு அறிந்திராத அந்தக் கிளர்ச்சியை ஆதரித்து அதன் வெற்றிக்குரிய வழிவகைகளையும் வகுத்துக் கூறினர் திரு. வி. க.

"சென்னையில் இரண்டு மில்கள் மூடப்பட்டிருப்பதை நேயர்கள் அறிவார்கள். அவைகள் மூடப்பட்டதன் காரணமும் நேயர்கட்குத் தெரியும். அது சிறு காரணமேயாகும். நமது நாட்டில் ஒரு புது உணர்ச்சியும் எழுச்சியும் தோன்றியிருக்கின்றன .. அவ்வுணர்ச்சியும் எழுச்சியும் தொழிலாளர்களிடத்தில் தோன்றியிருப்பது வியக்கத்தக்கது முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நியாயப்போர் தொடங்கியிருக்கிறது .. முதலாளிகள் வாதம், தொழிலாளர்களுக்கு இப்பொழுது உண்டாகியுள்ள உணர்ச்சியையும் எழுச்சியையும் அடக்கவேண்டும் என்பது. முதலாளிகளிடத்தில் அதிகாரம் இருக்கிறது; செல்வமிருக்கிறது; பிற துணைகளும் இருக்கின்றன. தொழிலாளர்களுக்கோ அவைகளில் ஒன்றேனுமில்லை. அவர்களுக்குத் துணைசெய்ய வேண்டுவது உண்மை ஒன்றே. உண்மை நெறி கடைப்பிடித்தொழுகுவோர்க்கு எவ்வித பயமும் ஆபத்தும் உண்டாகாதென்பது திண்ணம். தொழிலாளர்கள் ஊக்கம் குன்ருமல் உணர்ச்சி சலியாமல், ஒற்றுமை குலையாமல், உறுதி நெகிழாமல், உண்மை பிறழாமல் நியாயப் போர் முனையில் நின்று முதலாளிகளை எதிர்ப்பார்களாயின் வெற்றி தொழிலாளர்களுடையதே."[35]

திண்ணியர்

நாட்டுநிலையை ஒட்டி, அதன் பல்வேறு அம்சங்களிலும் கவனம் செலுத்திக் கருத்துத் தெரிவிக்கும் சாதனமாகத் தமது பத்திரிகைகளை நடத்தியுள்ளார் திரு. வி. க. அவை அனைத்திலும், நாட்டு விடுதலை நாட்டமே மேலோங்கி நின்று அவரை வழி நடத்தியுள்ளது.

---

35. தேசபக்தன்: 5—12—1918.

எந்தப் பத்திரிகையும் தனக்கெனச் சில நோக்கங்களைக் கொண்டே தொடங்குகிறது. அவற்றுள், காலப்போக்கில் நிறைவேறுவனவற்றைக் கைவிட்டும் நிறைவேருதனவற்றை மீண்டும் மீண்டும் வற்புறுத்தியும் வருவதே இலட்சியப் பத்திரிகையின் நெறி. இதுவே பத்திரிகை ஆசிரியத் திரு. வி க. வின் அடிப்படை நெறியாக இருந்து வந்தது. திரு. வி. க. வின் கொள்கைகளில் "சரி"களும் "தவறு"களும் இருக்கலாம். ஆனால் ஒரு பத்திரிகை ஆசிரியருக்குரிய நேர்மையோடும் திண்மையோடும் அவற்றை வலியுறுத்தி வந்ததில் அவருக்கு இணையான திண்ணியர் தமிழ்ப் பத்திரிகை உலகில் அதிகம் பேர் இல்லை.

[3]

அகம், புறம் என்னும் பாகுபாடுகள் உலகவாழ்விலே தான் உண்டென்பதில்லை; ஒரு பத்திரிகையின் வாழ்விலும் அவை உண்டு. பத்திரிகையைப் படிக்கின்றவர்கள் அதன் கொள்கை. சமுதாய நிகழ்ச்சிகளுக்கு அது கொடுக்கும் எதிரொலி முதலிய புற அம்சங்களையே அறிவார்கள். இவைகளுக்கு ஆதரவாகவும், பத்திரிகையின் வெற்றிக்கு அடிப்படையாகவும் உள்ள அக அம்சங்களை வாசகர்கள் பொதுவாக உணரமுடியாது. இந்த அக அம்சம், ஆசிரியருக்கும் துணையாசிரியர்களுக்கும் ஆசிரியருக்கும் அச்சகத்தாருக்கும் இடையே நிலவும் தொடர்பைப் பற்றியது.

நாளிதழ். ஒரே ஒருவரால் உருவாகி வெளிவருவதில்லை; பல நிலையினரும் இணைந்த ஆசிரியர் குழுவின் கூட்டுப் படைப்பே நாளிதழ், வார இதழும் அப்படியே அவர்களிடையே நல்லுறவு இல்லாவிட்டால் பத்திரிகை வெற்றி பெற முடியாது இந்த நல்லுறவைப் பணமோ அதிகாரமோ ஏற்படுத்த முடியாது. இப்போது பார்க்கிறோமே,– நிறையச் சம்பளம் கொடுக்கும் பத்திரிகைகளுக்குள்ளே ஆசிரியர்—துணையாசிரியர் சண்டைகள் கிளம்பிச் சந்திக்கே வந்து விடுகின்றன. ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்வதற்கென்றே அவர்கள், புதிய பத்திரிகைகளை ஆரம்பித்து விடுகிறார்கள்! ஆசிரியக்குழுவில் இத்தகைய "ஒட்டா உறவு"

இருந்தால் எல்லாரும் (தங்களுக்கு வேறோரிடத்தில் வேலை கிடைக்கும் வரை) கூலிக்கு மாரடிப்பார்கள்; அவர்கள் என்றைக்குமே பத்திரிகையின் இலட்சியத்தை மனதிற்கொண்டு பணியாற்றமாட்டார்கள். அதன் விளைவாகப் பத்திரிகையின் தரமே தளர்ந்துபோகும். இப்படித் தளர்ந்துபோன இதழ்களைத்தானே இன்று தமிழில் நிறையக் கண்டு வருகிறோம்! ..

வழிகாட்டி

திரு. வி. க "தேசபக்தன்", "நவசக்தி" இதழ்களின் ஆசிரியராக இருந்தபோது நடந்த சில நிகழ்ச்சிகளைத் திரு. வெ. சாமிநாத சர்மா குறிப்பிடுகிறார்; "பத்திரிகையில் செய்திகள் நல்ல தலைப்புகளுடன் அழகாக வெளியாக வேண்டுமென்கிற விஷயத்திலும், செய்திகளை வெளியிடும் விஷயத்தில் மற்றப் பத்திரிகைகளை முந்திக்கொள்ள வேண்டுமென்பதிலும், நான் காட்டிவந்த கண்டிப்பு, சில சமயங்களில் முதலியார் மீதும் பாய்வதுண்டு. அப்பொழுதெல்லாம் சிறிது கூட முகஞ்சுளித்துக் கொள்ளமாட்டார்; நான் அவரை அதிகாரம் செய்வதாகவும் கருதிக்கொள்ள மாட்டார். இவைகளுக்கு மாறாக முகத்திலே புன்சிரிப்பு தவழ என் "உத்தரவு"க்குக் கட்டுப்பட்டே நடப்பார். அன்பையும் ஒழுங்கையும் அடிப்படையாகக் கொண்டது இந்த "உத்தரவு" என்பதை உணர்ந்த பெருந்தகையல்லவோ அவர்? முக்கியமான செய்திகள் நிறைய வந்து அவைகளை அன்றே வெளியிட்டாக வேண்டிய நாட்களில் இன்றைய தினம் தங்கள் தலையங்கத்தை ஒன்றேகால் பத்திக்குள் சுருக்கிக் கொள்ள வேண்டும்' என்று முதலியாரிடம் கூறுவேன். ஏன், எதற்கு என்றெல்லாம் கேட்கவே மாட்டார். அப்படிக் கேட்க அவருக்கு உரிமையுண்டு; அதிகாரமுண்டு. ஆயினும் கேட்கமாட்டார். 'காரணத்தோடுதான் கூறுகிறான் இவன்' என்று அறிந்துகொண்டு, நான் சொல்லும் வரம்புக்குட்பட்டு தலையங்கத்தை முடித்துக்கொண்டுவிடுவார். இதற்குக் காரணம் என்மீது கொண்டிருந்த அன்பு அல்ல; என் மீது வைத்திருந்த நம்பிக்கையென்று சொல்வது ஓரளவுக்குத்தான் பொருந்தும். பத்திரிகை நல்ல முறையில் வெளியாக வேண்டுமானால், அதற்கு ஆசிரியர் குழாத்தைச் சேர்ந்த அனைவரும் ஒருவித ஒழுங்குக்கு, ஒருவித கட்டுப்பாட்டுக்கு

உட்பட்டு நடப்பதில், தாம் மற்றவர்களுக்கு வழிகாட்டியாயிருக்க வேண்டுமென்று அவர் கருதி வந்ததுதான் காரணம்."[36]

உளப்படுத்தும் இயல்பு

பத்திரிகையில் பணியாற்றிய அனைவரையும் அப்பணியில் உளப்படுத்திக்கொள்ளும் ஒரு பெரும் இயல்பும் திரு வி. க. விடம் அமைந்திருந்தது. தாம் ஆசிரியர் என்பதால், எது பற்றியும் தமது கருத்தே பத்திரிகையில் இடம்பெற வேண்டும் என்று அவர் தமக்குள் சுருங்கிக் கொள்வதில்லை; அடிக்கடி, எப்பொருள் பற்றித் தலையங்கம் எழுதுவது என்பது முதல் பத்திரிகைத் தொடர்பான வேறு செய்திகள் வரை. எல்லாவற்றிலும் துணையாசிரியர்களின் கருத்தை அறிவதும், அவற்றுள் நல்ல கருத்துக்கு (ஆளைப்பாராமல்) மதிப்பளிப்பதும் அவர் மேற்கொண்ட நல்ல பழக்கங்கள்.

திரு. வி. க. வைப் பலர் "சாது முதலியார்" என்றார்கள்; சுப்பிரமணிய சிவா போன்ற தீவிரவாதிகளும் குத்தூசி குருசாமி போன்ற சீர்திருத்தவாதிகளும் இவரை "வெண்டைக்காய் முதலியார்", "விளக்கெண்ணெய் முதலியார்" என்றெல்லாம் கேலி செய்தார்கள். ஆனால், மாறுபட்ட கருத்துடையவர்களிடமும் திரு. வி. க. பண்போடு பழகினர் என்பதையும், கருத்தின் மாறுபாட்டை அவர் என்றுமே அதற்குரிய மனிதனின் மேல் காழ்ப்பாகக் கொண்டதில்லை என்பதையும் நாம் அறிவோம் தம்மையொத்த தலைவர்களிடம்தான் இப்படி என்பதில்லை; தமது பத்திரிகையின் துணையாசிரியர்களிடம்கூட அவர், (எந்தக் காரணத்தையிட்டும்), கடுகடுப்போ, காழ்ப்போ கொண்டதில்லை. வேலையைச் சரிவரச் செய்யாத துணையாசிரியர்களைக்கூட (தவிர்க்க முடியாத நிலையென்று இருந்தாலன்றி) அவர் கண்டிப்பதில்லை. அவரவர் பொறுப்பை அவரவரே உணர்ந்து செயலாற்ற வேண்டுமென்று விரும்பி, அவ்வாறே செய்வரென்று நம்பி. பண்புத் தடம் புரளாமல் சென்றது அவருடைய நல்லுள்ளம்,

திரு. வி. க.வின் செயல்களைக் கவனிக்கையில், 'இளையவர்களை ஊக்கி உயர்த்தவே பிறப்பெடுத்தவரோ?' என்று

36. நான் கண்ட நால்வர்: பக்கம், 37—38.

எண்ணத் தோன்றும். யாரிடமேனும் சிறிது ஆற்றல் இருப்பதாகத் தெரிந்தாலும் அவரைப்புகழுரை என்னும் பெருமழையால் குளிர்விப்பார் திரு. வி. க. சிலகாலத்துக்கு முன்வரை, சிலர், "திரு. வி. க. அவர்களால் பாராட்டப்பட்டவர்" என்ற பெருமையை ஒரு சிறப்புப் பட்டமாகவே கொண்டிருந்தார்கள்!...

இளமையைப் போற்றி ஊக்கும் இப்பண்பே, பத்திரிகை போன்ற துறைகளின் தலைவர்களுக்கு மிக முக்கியம். "யாண்டு பலவாக நரையிலவாகுதல் யாங்கு ஆகியர்" என்ற பிசிராந்தையார் பாட்டு பல உண்மைகளைத் தருகிறது. அவற்றுள் முக்கியமானது, 'தலைவராக உள்ளவர் அன்பாளராகவும் பண்பாளராகவும் இருந்தால் அவரைச் சார்ந்த எல்லோருமே நல்லவர்களாக இருந்து அவருக்குக் கவலை ஏற்படாதபடிச் செய்வார்கள்' என்பது. இதனை வாழ்க்கை நெறியாகக் கடைப்பிடித்து, பிசிராந்தையாரின் நரைக்காத தலைபோல, காலவெள்ளத்தில் கரையாத வண்ணமுடையதாகத் தமது பத்திரிகைத் தொண்டை நிலைநிறுத்தியவர் திரு. வி. க.

ஒட்டிய உறவு

"சமீபத்தில் ஒருநாள் சாது அச்சுக்கூடத்துக்கு நான் போயிருந்தேன். இருபது வருஷத்துக்கு முன்னால் அங்கே பணியாற்றிய அச்சுக் கோக்கும் தொழிலாளிகளும் மைபண்டு வேலை செய்பவர்களும் இன்னும் அங்கே இருந்து வருவதைக் கண்டேன். அவர்கள் முன்போலவே சந்தோஷமாகவும் 'சின்னமுதலியா'ரிடம் (திரு. வி. க. விடம்) அளவற்ற அன்புள்ளவர்களாகவும் இருப்பதைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியுண்டாயிற்று"[37] என்று பிற்காலத்தில் எழுதியுள்ளார் கல்கி.

குடியிருக்கும் வீடுகளுக்கே பத்து ஆண்டு, பதினைந்து ஆண்டு என்று காலக்கெடு கொடுத்துக் கட்டுகிற காலம் இது. தம்மிடம் வேலை பார்ப்பவர்கள் இரண்டு நாளோடு மூன்று நாள் விடுமுறை எடுத்துக்கொண்டால், அவரை நீக்கிவிட்டு வேறொருவரை நியமித்துக்கொள்வோர் அநேகர். அவர்கள் தொழிலாளர் தலைவர்களாகவும், தொழிலாளர்களுக்கு வக்கீல்களாகவும்கூட இருப்பார்கள்! தொழிலாளிகளும் சளைத்தவர்க

37. பாரதி பிறந்தார்: பக்கம், 54.

ளல்லர்; 'போனசு'ம் சம்பள உயர்வுமே அவர்களில் பெரும்பாலாருக்குக் கண்கண்ட தெய்வமாகிவிட்டது. ஒரு ரூபாய் சம்பள உயர்வு கிடைத்தால், பலகாலம் இருந்த அச்சகத்தை விட்டு ஓடிவிடவும் பலர் தயாராக இருக்கிறார்கள். இந்தச் "சரிவுகள்" ஏற்பட்டுக்கொண்டிருந்த காலத்திலேதான் திரு வி. க. வின் அச்சக ஊழியர்கள், அவரைப் பிரிந்துசெல்லும் எண்ணமே இல்லாமல் இறுதிவரை இருந்திருக்கிறார்கள்...

உரிமை நெறி

தேசபக்தனிலும் நவசக்தியிலும் துணையாசிரியராக இருந்த சாமிநாத சர்மாவுக்குத் திரு. வி. க எங்குமில்லாத உரிமைகளை வழங்கியிருந்தார். அவர்கள் இருவருக்கும் இடையே ஒருவிதமான உடன்பிறந்தார் உணர்ச்சி நிலவியது. இந்த அன்புத் தொடர்பினால் மட்டுமே சர்மாவுக்குத் திரு. வி. க. அவ்வளவு உரிமை வழங்கினாரோ என்று எண்ணுகிறோம். ஆனால் நவசக்தியில் சிறிது காலம் பணியாற்றிய கல்கி கிருஷ்ணமூர்த்திக்கும் திரு. வி க. வுக்கும் இந்த அளவு இறுக்கமான தொடர்பு இருந்ததில்லை. ஆயினும் அவருக்கும் நவசக்தியில் முழு உரிமை கிடைத்து வந்தது.

"நான் விலகிக் கொள்ள விரும்புவதாகத் திரு. வி. க விடம் தெரிவித்தபோது அவரால் அதை நம்ப முடியவே இல்லை. வியப்பும் வருத்தமும் கூட அடைந்தார். விலகிக் கொள்ள விரும்புவதற்குக் காரணம் கேட்டதுடன், "இங்கு ஏதாவது குறை உண்டா?" என்றும் விசாரித்தார். உண்மை என்னவென்றால், நவசக்தி காரியாலயத்தில் எனக்கு ஒரு குறையும் இருக்கவில்லை. எந்தப் பத்திரிகாலயத்திலும் ஓர் உதவி ஆசிரியருக்கு அவ்வளவு உரிமையும் மரியாதையும் அளிக்க மாட்டார்கள் என்பதை நன்கு அறிந்திருந்தேன்."[38]

எல்லார்க்கும் நன்றாம்...

தமிழர்களாகப் பிறந்தவர்களிலே பலருக்குத் தன் முனைப்பு அதிகம். அதனாலேதான் பலர்சேர்ந்து செய்யும் பணிகள் இங்கே வெற்றி பெறமுடியவில்லை. பிறரின் திறமையையும், தகுதியையும், தேவையையும் மதிக்கும் பழக்கம் தமிழர்களிடம் மிகுதியாக இல்லாததாலேயே இங்கே தலைவர் தொண்டர் உறவு சீராக இல்லை. இதனால் கூட்டு முயற்சிகளோ இயக்கங்களோ தமிழகத்தில் கடைசிவரை நீடிக்க முடிவதில்லை.

(தொடரும்)

38 பாரதி பிறந்தார்: பக்கம், 57.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஈரத்தின் சுவடு

திரு. இர. குழந்தைவேலு, எம். ஏ.,

காட்சி : 8

களம் : மருதி மனையின் முன்புறம்.

காலம் : மாலை

கூற்று : வெள்ளிவீதி, மருதியின் அன்னை, ஆதிமந்தி, தனி ஆள் ஒருவர்.

வெள்ளிவீதி : அன்னையே! இன்று சிறிது முன்னரே மருதியைக் காணவே விரைந்து வந்தேன். அவள் எங்குச் சென்றிருத்தல் கூடும்?

மருதியின் அன்னை : வீட்டின் பின்புறம் இருப்பாள், மகளே!

வெள்ளி வீதி : (தெருவைப் பார்த்து) அன்னையே! இப்புறம் வாருங்கள்! நம் தெருவின் கோடியில் வீரர் இருவர் குதிரைகளில் வருகிறார்கள்!

மருதியின் அன்னை : அவர்களைத் தொடர்ந்து நான்கு குதிரை பூட்டிய தேரும் வருகிறதே!

வெள்ளிவீதி : தேர், நம் வீட்டை நெருங்குகிறதே! (தேர் நின்றது) அன்னையே, தேரிலிருந்து இறங்கியவர், நம் மன்னர் மகள் ஆதிமந்தி! (ஆதிமந்தியை நோக்கிக் கை கூப்பி) வணக்கம் அம்மா!

ஆதிமந்தி : ஓ! வெள்ளிவீதியா? வணக்கம்.

மருதியின் அன்னை : வாருங்கள். வணக்கம்.

ஆதிமந்தி : வணக்கம். தாயே. (வெள்ளிவீதியை நோக்கி) வெள்ளிவீதி! இத்தாய் யார் என்று அறிய விருப்பம்.

வெள்ளிவீதி : இவரே மருதியின் அன்னையார் அனைவரும் வீட்டிற்குள் செல்லலாம். (அனைவரும் வீட்டிற்குள் அமர்கின்றார்கள்).

ஆதிமந்தி : தாயே, தங்களைக் காண்பதே எனக்குப் பெருமை. என் தந்தையார் தங்கள் மகளின் கைம்மாறு கருதாத உதவிக்குக் கொடை கொடுத்துப் பாராட்ட விரும்பினர் அந்நற்செய்தியினை அறிவிக்கவே என்னைத் தந்தையார் விடுத்தனர். இப்பாராட்டினைத் தங்கள் மகள் ஏற்றருளத் தாங்கள் இசைவு தருதல்வேண்டும்

மருதியின் அன்னை : (மகிழ்ந்து) தாங்கள் என் மனை புகுந்ததே எங்களுக்குப் பெருமை சேர்ப்பது. என் மகளுக்குப் பாராட்டு என்பதனை அறிந்து மகிழ்கிறேன்.

வெள்ளிவீதி : (தெருவில் எழுந்த ஒலியைக் கேட்டுத் திரும்பி, அதிர்ச்சியுற்று) அன்னையே இவள்?

ஆதிமந்தி : அவள் ஆடையிலிருந்து நீர்த்துளிகள் விழுகின்றன!

மருதியின் அன்னை : ஆ! அவள் என் மகளே!

வெள்ளிவீதி : மருதி! மருதி!

மருதியின் அன்னை : (மருதியை அணுகி) மயக்கமோ? கண்ணை மூடியிருக்கின்றாளே!

ஒருவர் : (உடலைத் தூக்கி வந்தவர் குரல் துன்ப உணர்ச்சியால் தளரவே) வடிக்கண்ணாள் தூங்குகின்றாள். இனி விழிப்பதேது?

மருதியின் அன்னை : (அணைத்துப் புலம்பி) ஐயகோ! மகளே மருதி! என்னைப் பிரிந்தாயே!

வெள்ளிவீதி : (அழுது) என் உயிரே! என் நெஞ்சிற்குள் பதிந்த உணர்வின் ஓவியமே! நின் உயிர் தனித்துப் போவதா? எனக்குச் சாவு வாராதோ?

ஆதிமந்தி : (கண்ணீர் கலங்கி) ஐயகோ! நெஞ்சு பொறுக்க வியலாத இக்கொடுமையை யாரிடம் சொல்வேன்? மருதி, அனைவருடைய கண்களும் கண்ணீரில் நீந்த மறைந்தாயே! ஆடை நெகிழ்ந்துவிடவே துடித்து உதவும் கைபோல, என் கண்மணியனையரைக் காத்த நின் நெஞ்சின் ஈரத்தை எவ்வண்ணம் மறப்பேன்? நாட்டைக் காக்கப் பாயும் காவிரி நின் உயிர்குடித்ததே! நின் ஈரம் காவிரிக்கு ஏது? என் தந்தை ஈரமில்லாக் காவிரியைத் தேக்கக் கல்லணை கட்டினரே! நின் உயிரைக் காக்க, என் தந்தை அணை அமைக்கவில்லையே! எங்கள் நினைவில் பதிந்த நின் ஈரத்தின் சுவட்டைக் கரைக்கும் வல்லமை காவிரிக்கு ஏது?

நிறைவுற்றது.

பொற்புடைத்தாகப் பொருந்திய முடங்கல்

திரு. K. S. மகாதேவன், M. A., B. Sc.,
(பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் கலைக்கல்லூரி, கடலூர்.)

கானலந் துறையில் தன்னை விடுத்து நீங்கிய கோவலன் மறுநாட் காலையிலாவது வருவான் என்று நம்பியே மாதவி பொழுதைக் கழித்தாள். ஆனால், கண்ணகியை அழைத்துக் கொண்டு அவன் பூம்புகாரை விட்டே சென்று விடுவான் என்று அவள் சிறிதும் நினைக்கவில்லை! வசந்தமாலையிடம் தான் கொடுத்தனுப்பிய மடலை அவன் பெற மறுத்ததையும், கடுமொழி பேசியதையும் அவன் வருவான் என்ற நம்பிக்கையிலேயே பொறுத்துக் கொண்டிருந்தாள். ஆனால், இப்பொழுதோ மாதவி தன்னை முற்றிலும் புதியதொரு நிலையில் வைத்துப் பார்க்கத் தொடங்கினாள். ஏசாச் சிறப்பின் இசை விளங்கும் பெருங் குடும்பத்தில் இத்தகையதொரு இரங்கும் நிகழ்ச்சி நடப்பதற்கு உலகம் யாரைக் காரணம் காட்டித் தூற்றும்? கோவலனது வயது முதிர்ந்த பெற்றோரும், குலச் செல்வி கண்ணகியும், அவர்தம் சுற்றத்தினரும் அவள் மனக் கண்முன் வந்து நின்றனர். இராமன், தாதை ஏவலின் மாதுடன் போன செய்தியை உலகம் புரிந்து கொள்ளும். ஆனால், குரவர் ஏவல் அன்றியே குலப்பிறப் பாட்டியுடன் கோவலன் பூம்புகார் நீங்கிய செய்தியை உலகத்தால் புரிந்து கொள்ள முடியுமா? தனது ஆடலாலும் பாடலாலும் புகழ் பெற்றுயர்ந்த பூம்புகாரே தன்னைப் பழி தூற்றும் ஒரு நிலைமை உருவாகி விட்டதே என்ற அச்சமும், வருத்தமும் அவள் உள்ளத்தைச் செயலறச் செய்தன. இந்நிலையில் மாதவி மீண்டும் ஒரு முடங்கலை 'வருந்துயர் நீக்கென மலர்க் கையின் எழுதிக்' கோசிகமாணி என்னும் அந்தணனிடம் தந்து 'கண்மணி அனையானுக்குக் காட்டு' என விடுத்தாள்.

கோவலன் உள நிலை.

முடங்கலை எடுத்து வந்த கோசிகமாணிக்குக் கோவலனை அடையாளம் கண்டு கொள்வது கூடக் கடினமாயிருந்தது!

"காதலி தன்னொடு கானம் போந்ததற்கு
ஊதுலைக் குருகின் உயிர்த்தனன் கலங்கி"

என இளங்கோவே இரங்கிக் கூறுகின்றார் ஆம், கோவலன் உள்ளத்திலே சுழன்று வீசிக்கொண்டிருந்த புயல் அவன் உருவத்தையே நிலைகுலைய வைத்திருந்தது! தன் வாழ்வில் உருண்டு சென்ற நிகழ்ச்சிகளைக் கொண்டு தன்னையே மதிப்பிட்டுப் பார்க்கும் ஓர் இரங்கத்தக்க நிலையில் அவன் இருந்தான். இப்பொழுது அவன் இருக்கும் நிலைக்கு யாரை நோவது?

பொருளுரையாளர் வகுத்த நெறி.

வாழ்க்கையை அகம் புறம் என இரு கூருக்கி இலக்கணம் வகுத்துப் பெருமைகொண்ட தமிழ் இனத்தில்தான் கோவலனும் தோன்றினான். இயல்பால் வேறுபட்ட அகமும், புறமும் கலந்து குழம்பினால் வாழ்க்கையே குழம்பும் என்பதை அறிந்த தமிழர்கள் அவற்றிடையே உறுதியாக எல்லைக்கோடு கிழித்துச் சென்றனர் இருந்தாலும், காதலாகிய அகத்தையும், கலையாகிய புறத்தையும் குழப்பிக்கொண்டு ஏனோ கோவலன் கண்ணகிக்கும் மாதவிக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தான்!

“பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக்
காட்டின.........”

மாதவியின் கலைச் சுடர்வீசும் உருவத்தை உலகவர்போல் தானும் கண்டு மகிழாது காதற் கண் கொண்டு பார்த்து ஏங்கினான். அதன் விளைவாக,

“மணமனைபுக்கு மாதவி தன்னோடு
அணைவுறு வைகலின் அயர்ந்தன் மயங்கி
விடுதலறியா விருப்பினன் ஆயினன்”

மாதவி என் செய்வாள்!

“ஆடலும் பாடலும் அழகும் என்றிக்
கூறிய மூன்றின் ஒன்று குறை படாமல்”

திகழ்ந்த பூம்புகார்ப் பொற்றொடி உலகவர்க்குக் கலைச்சுடர் வீசும் பொன்னாகவும், கோவலனுக்குக் காதல் மணம் கமழும் மலராகவும் காட்சி தந்து கொண்டிருந்தாள்! ஆம், மாதவி உலகின் கலைத் தேவி; கோவலனின் காதல் தேவி! அக வாழ்வில்,

" நிலவுப் பயன் கொள்ளும் நெடு நிலா முற்றத்துக்
கலவியும் புலவியும் காதலற்கு அளித்தாங்கு "

காலத்தைக் கனிய வைத்துக் கொண்டிருந்தாள். அதே பொழுது புற வாழ்வில் பொலிவுற்றோங்கி,

" மங்கை மாதவி வழிமுதல் தோன்றிய
அங்கரவல்குல் ஆடலும் காண்குதும் "

என உலகவரைத் திரண்டுவரச் செய்து கொண்டிருந்தாள்! இவ்வாறாகக் காதல் மாதவி கோவலனின் காலடியில் வீழ்ந்து விட்ட நேரத்திலும் கலை மாதவி,

" நிலத் தெய்வம் வியப்பெய்த
நீள் நிலத்தோர் மனமகிழ "

புகழ் ஏணியின் உச்சியில் ஏறிக்கொண்டே சென்றாள். காதல் மாதவியைக் காலடியில் விழச் செய்த கோவலன் கலை மாதவியையும் பிடித்துத் தன் கைக்குள் அடக்கிவிட நினைத்தான்; வேண்டாத இம் முயற்சியில் தோல்வி கண்ட அவன்

"................ வானவன் விழவும்
ஆடலும் கோலமும் அணியும் கடைக் கொள
ஊடற் கோலமோடு.............."

இருந்து சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் மனம் புழுங்கிக் கொண்டிருந்தான். இந்நிலையில் மாதவி பாடிய கானற் பாணி அவளது 'விடுதலறியா விருப்புக்கு' முற்றுப் புள்ளி வைத்து விடுதலை வாங்கித் தந்தது! கவவுக்கை நெகிழ்த்துக் கோவலன் நீங்கிய பின் கையற்ற நெஞ்சினளாய் மாதவி தன் மனை சேர்ந்தாள். உடனே காதல் மணம் கமழும் ஒரு கடிதத்தைத்

" தனிவா யவிழ்ந்த தனிப்படு காமத்து
விளையா மழலையின்.............."

விரிவாக எழுதித் தோழி வசந்தமாலையிடம் தந்து "கோவலற்கு அளித்துக் கொணர்க" எனப் பணித்தாள். ஆனால், கலையையும் காதலையும் குழப்பிக்கொண்டிருந்த கோவலனால் உண்மை நிலையை உணர்ந்து கொள்ள முடியவில்லை. முன்பு மாதவி உதிர்த்த கலை மொழிகள் யாவும் அவனுக்குக் காதல் மொழிகளாகத் தெரிந்தன. இப்பொழுதோ,

காதல் மணம் வீசும் அவள் மழலை மொழிகள் யாவும் கலையரங்கத்து மனப்பாடம் செய்த வெறும் வசனமாகத் தோன்றின !

" ஆடல் மகளே ஆதலின் ஆயிழை
பாடு பெற்றன அப்பைந்தொடி தனக்கு "

எனப் பேசி வசந்தமாலை ஏந்திய திருமுகத்தை வாங்கவே மறுத்து விட்டான். இந்தக் கொடுமையையும் மாதவி பொறுத்துக் கொண்டு,

" மாலை வாராராயினும் மாணிழை
காலை காண்குவமெனக் கையறு நெஞ்சமொடு "

காத்துக் கொண்டிருந்தாள். ஆனால் கோவலனோ, வருக என அவள் இரந்து வேண்டிக் கொண்டிருக்கும் போதே கண்ணகிபால் அணைந்து அவளை அழைத்துக் கொண்டு புகாரைவிட்டே பெயர்ந்து வந்து விட்டான்.

பிழைத்தவர் எவர் ?

கோவலன் இவ்வாறு இல்லறத்தில் செம்மையாக நில்லாமல் பெண்டிர் இருவரிடையே ஊசலாடியதற்குக் கண்ணகியைக் குறை சொல்வதா, மாதவியைக் குறை சொல்வதா அன்றி, அகத்தையும் புறத்தையும் குழப்பிக்கொண்ட அவனைத் தான் குறை சொல்வதா ? எண்ணி எண்ணி, உட்புலம்புற்று. உருவம் திரிந்து உண்மையை நெருங்கிக் கொண்டிருக்கும் கோவலன் கையில் மாதவி எழுதிய மண்ணுடை முடங்கலைக் கோசிகமாணி நீட்டினன். அனுபவ முதிர்ச்சியும், அறவோரின் தொடர்பும் அவனைக் 'குன்றுக் கொள்கைக் கோவலனாக' உயர்த்திவிட்டன. மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்,' சலம் புணர் கொள்கை சலதி 'என்றெல்லாம் மாதவி பற்றி முன்னர் ஆராயாது பேசிய அனைத்தும் உணர்ச்சியில் கொட்டிய பொருளற்ற தொடர்களே என்பதை உணரும் உளப் பாங்கு இப்பொழுது அவனுக்கு உண்டாகி விட்டது. ஓலை மடிப்பின் மேலிருந்த குறுநெறிக் கூந்தல் மண்பொறி தாதவிழ் புரிகுழல் பேதை மாதவி களங்கமற்ற அன்பில் கட்டுண்டு தன்னுடன் கலந்து வாழ்ந்திருந்த காலத்தை அவனுக்கு நினைவூட்டியது! பொறியினை மெல்ல விடுவித்து, ஏட்டகம் விரித்து அதில் கண்களை ஓட்டிய கோவலன்,

" அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக் கொளல் வேண்டும்
குரவர் பணி அன்றியும் குலப் பிறப்பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு அறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி ! "

என இடம் பெற்றிருந்த இசை மொழியைக் கண்டான். மிகப் பண்பட்ட முறையில் அமைந்துள்ள சொற்களில் சுடர் விடும் தூய அன்பு கோவலனைப் பொய்தீர் காட்சியனுகச் செய்து மாதவி தூயவள் என விரைந்து காணச் செய்தது !

" என்றவள் எழுதிய இசைமொழி உணர்ந்து
தன் தீது இலள் எனத் தளர்ச்சி நீங்கி
என் தீது என்றே எய்தியது உணர்ந்து "

உளந்தெளிந்து கோவலன் ஒருவழிப்பட்டான். பிழை தனதே என்பதை உணர்ந்தான். " குறவர் பணித்ததால் இராமன் மனையாளுடன் அயோத்தி நீங்கிச் சென்றுன் ; ஆனுல் தாங்களோ, குரவர் பணித்தலன்றியும் குலப் பிறப் பாட்டியோடு புகாரை விடுத்துச்சென்று விட்டீர்களே !" என்று மாதவி கேட்டிருப்பது கோவலன் உள்ளத்தைப் பெரிதும் தொட்டது. மேலும், " நான் மனைக்கு மீள்க என இரந்து வேண்டிக் காத்திருக்கும் போதே தாங்கள் கழிந்து சென்று விட்டீர்களே ! அவ்வாறு தாங்கள் செல்வதற்கு நேர்ந்த பிழைப்புத்தான் என்ன ? அஃதறியாது என் நெஞ்சம் செய லற்றுக் கிடக்கிறது. அதனைப் பொறுத்தருளல் வேண்டும் " என்ற மாதவியின் வேண்டுகோள் அவனைக் கடமை உணரும் புது மனிதனுக்கி விட்டது ! ஆம், மாதவியின் முடங்கலில் காணும் 'குரவர் பணி அன்றியும்,' இரவிடைக் கழிதற்கு,' ' என் பிழைப்பு அறியாது ' ஆகிய தொடர்களின் பொருள் நயம் அவன் பெற்றோர்க்கும், மற்றோர்க்கும் ஆற்றத் தவறிய கடமைகளை அறிவுறுத்தின ! குரவர் பணித்தலன்றியே, குலப்பிறப் பாட்டியுடன் தான் இரந்து வேண்டலுக்கிடையே கோவலன் சென்றதற்கு நேர்ந்த பிழைப்பு என்ன என்றறி யாது மாதவி கலங்கிக் கொண்டிருக்கிறுள். ஆனுல் கோவலன் நிலை என்ன ? இரு முது குரவர்க்கும் செய்ய வேண்டிய பணிவிடையை விடுத்துக் குலப்பிறப் பாட்டியுடனே இராக் காலத்தே நகரைவிட்டு நீங்கி வந்தது தனது பிழைப்பே

என்பதையும் அறியாமல் இருந்து வருகிருன்! அருமணி இழந்த நாகம்போல் தன் பிரிவால் வருந்தும் தாய் தந்தையர்க்கு அவன் இப்பொழுது எப்படி உதவ முடியும்? தான் செய்த தவற்றை அறியாது உலகம் மாதவியைத் தூற்றுவதை அவன் எவ்வாறு தடுக்க முடியும்? கோசிகமாணியிடம் கூறி அனுப்பும் ஆறுதல் மொழிகள் பெற்ருேரின் துயரத்தைப் போக்கிவிட மாட்டா. கோசிகமாணியிடம் திருமுகத்திற்கு மறுமொழி தந்து அனுப்பினுலும் அது; மாதவியின் கையறு நெஞ்சத்தைக் கடிந்து விடாது! முது பெருங் குரவர்க்கு அன்புக்குரிய இளைய உள்ளங்கள் துணையாக இருத்தல் வேண்டும். பிரிவால் வருந்தும் இளைய உள்ளங்களோ, உலகியல் அனுபவமுள்ள முதியவர்கள் அரவணைப்பில் கவலையின்றி இருத்தல் வேண்டும் கோவலனுக்குக் கடமையை நினைவூட்டி நல்லறிவு புகட்டிய மாந்தளிர் மேனி மாதவிதான் யார்? உடை கலப்பட்டு நீந்திய தனது குல முன்னேனைக் கரையேற்றிக் காத்த தெய்வத்தின் பெயரைத் தாங்கி நிற்கும் தன் மகள் மணிமேகலையைப் பயந்தெடுத்த நற்ருய் அல்லளோ? குலக் கொழுந்து மணிமேகலை அருகில் இருக்கும் போது குரவர்கள் ஏன் இடுக்கண் எய்தித் துயர்க்கடல் நீந்த வேண்டும்? குரவர்கள் அருகில் இருக்கும்போது குலக்கொழுந்தைப் பெற்றெடுத்த செல்வி ஏன் கையற்று உள்ளம் நடுங்க வேண்டும்? ஆம்,

"சிறப்பிற் குன்ருச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்ருப் பெருந்தோள் மடந்தை"

மாதவியைத் தன் குரவர்க்கு அறிமுகம் செய்வித்து அவர்களிடம் அடைக்கல மாக்குவதே இந்நிலையில் அனைவருடைய துன்பத்தையும் துடைக்கும் வழியாகும் எனக் கோவலன் கண்டான். எவரும் வியக்கும் வகையில் அதற்கு ஒரு வழியையும் மேற்கொண்டான்!

பொற்புடைத்தான பொருத்தம்!

மாதவி கோவலனுக்கு எழுதிய திருமுகத்தில் இடம் பெற்ற சொற்களின் பொருளுரை மிகவும் பொருத்தமாக இருந்தது. அத்திருமுகம் கோவலன் தன் குரவர்க்குத் தான் அறியாது செய்த பிழையைப் பொறுத்தருள்க என வேண்டி

விடுக்கும் திருமுகமாகவும் பொருத்தமாக அமைந்தது! அஃதோடு, மாதவி தன் மாசற்ற அன்பையும், பணிவையும காட்டி, ஆதரவையும் அரவணைப்பையும் வேண்டிக் கோவலனது குரவர்க்கு எழுதிக்கொள்ளும் திருமுகமாகவும் அமைந்து விட்டது! எனவே, மாதவியின் இசை மொழி கொண்ட முடங்கலைத் தன் குரவரிடம் சேர்க்க நினைத்த கோவலன்,

" எற்பயந் தோற்கிம் மண்ணுடை முடங்கல்
பொற்புடைத்தாகப் பொருளுரை பொருந்தியது
மாசில் குரவர் மலரடி தொழுதேன்
கோசிக மாணி காட்டெனக் கொடுத்து "

மன நிறைவு கொண்டான். மாதவியின் மண்ணுடை முடங்கல் மாதவிக்கும், கோவலனுக்கும் குரவர்க்கும் ஓர் அன்புப் பிணைப்பை ஏற்படுத்தி விட்டது! இனி மாதவியின் நடுக்கமும், குரவர்கள் கொண்ட இடுக்கணும் மறைந்துவிடும்! கோசிகமாணியை,

" நடுக்கம் களைந்து அவர் நல்லகம் பொருந்திய
இடுக்கண் களைதற்கு ஈண்டெனப் போக்கி "

மனக்கவலை விடுத்தான். அடுத்து, கடமையை ஆற்றிய மன நிறைவோடு பாடும் பாணரில் பாங்குறச் சேர்ந்து பாடி மகிழ்ந்திருந்தான்.

மாதவி பெறும் மதிப்பு.

கோவலன் உள்ளத்தில் மாதவிக்கும் மணிமேகலைக்கும் நிலையான இடம் கிடைத்து விட்டது என்பதைப் பின்னர் அவன்

" அணிதிகழ் போதி அறவோன் தன்முன்
மணிமேகலையை மாதவி அளிப்ப "

நனவுபோல நள்ளிருள் யாமத்தில் கனவு காண்பதாலும் அறிகிறோம்! மாசில் கற்பின் மனைவியோடு பிரியா வாழ்க்கை பெற இருக்கும் கோவலன், தன் தவறுணர்ந்து தளர்ச்சி நீங்கி, மாதவியைத் தன் குடும்பத்தில் ஒருத்தியாக மதித்துத் தந்தருளிய சிறப்பு உணர்ந்து பயில்வோரின் உள்ளத்தை உருக்குகிறது. இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் மாதவியை அரவணைத்துப் போற்றுவது நம்மை மெய் மறக்கச் செய்கிறது!

தமிழ் நாட்டு ஓவியங்கள்

திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை பி. ஏ., பி. எல்.,

உலகப் பெருமன்றத்தில் கலைப் பண்பு சிறந்த நாடுகளே போற்றப் பெறுவன. அசீரிய, பாபிலோனிய, எகிப்திய, கிரேக்க இத்தாலியக் கலைகள் ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னாத் தோன்றினும் இன்னும் இவற்றை உலகம் பாராட்டு கின்றது இந்தியாவிலும், 3500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை யான கலைச்சின்னங்கள். சிந்து வெளி நாகரிகத்தின் முதிர்ச்சியை அறிவுறுத்துகின்றன. நாம் இச்சான்றுகளின் மூலமே அந்தந்த நாட்டு மக்களின் நாகரிகம், சரித்திரம், வாழ்க்கை நலன்களை அறிகிறோம்.

நாகரிக நுண்கலைகள் என்பவை இசை, ஓவியம், சிற்பம், நடனம் என்பனவும் பிறவுமாம். இவைகளின் உணர்ச்சி ஒரு நாட்டு மக்களின் உள்ளத்தில் தோய்ந்த உயிர்த் தத்துவம் எனலாம். சிறந்த கலைச் செல்வங்கள் உருவெடுக்க வேண்டு மானால், அந்நாட்டு மக்களின் இதயங்களில் அழகுத் தன்மை மட்டுமன்று. தன்னம்பிக்கை அன்பு பக்தி போன்ற உண்மை உணர்ச்சிகளும் ததும்ப வேண்டும்.

தமிழ்நாடு கலைப்பண்பு நிறைந்த நாடு. நாம் நமது முற்காலத்துக் கலைப் பொருள்களைக் கொண்டாடுகிறோம். அப்பொருள்கள் நமது மனத்தைக் கொள்ளை கொள்ளு கின்றன. ஏன் ? அக்கலைஞரிடம் தீவிர நல்லுணர்ச்சியும், தன்னம்பிக்கையும் இருந்தன. இத்தீவிர உணர்ச்சிகள் இல்லாத வரை கலைப் பொருள்களைச் செய்ய முடியாதுதான். தமிழ்நாட்டில் தேவார திருவாசகம் போன்ற இசைப்பாடல் களையோ, தஞ்சாவூர் சித்தன்னவாசல் சுவரோவியங்களையோ, தென்னாட்டுத் திருக்கோயில்கள், அவைகளில் இடப்பெறும் நடராசர் போன்ற உருவச் சிற்பங்களையோ, நம்பிக்கையும், பக்தியும் இல்லா ஒருவன் உண்டாக்கியிருக்க முடியுமா ? சமய தத்துவங்களை அறிந்தும், சிவனது நடன தத்துவத்தை மனக் கண்களால் காணாத ஒரு கலைஞன் எவ்வாறு அவற்றை உருவாக்கமுடியும் ! ஆகவே, அவன் தன் ஆத்மாவின் முழு வன்மையோடும், அன்பையும் அருளையும் துணைக்கொண்டு, கலை நூல்களையும், அறிந்து, இந் நுண் கலைகளை நினைந்து

நினைந்து உருவாக்கினான் இவ்வாறு சிந்தனையில் தோய்ந்த அத்தொழிலாளிகள், தாம் கண்ட கலைப் பொருள்களை, உலகம் கண்டு நுகரக் கருதி, நமக்குத் தந்துள்ளார்கள். இவற்றால் நாம் பெருமிதங் கொள்ளுகிறோம்.

தமிழ் நாட்டில் பண்டு தொட்டுச் சிறந்த ஓவியம் பண்பு நிறைந்தது ஓவிய வல்லார் பலர் சிறந்திருந்தனர். மன்னர், செல்வர்களது மாடங்களை ஓவியங்கள் அழகு படுத்தின. இப்போது நமக்குக் கிடைத்துள்ள இரண்டாயிரம் ஆண்டு கட்கு முற்பட்ட சங்க கால இலக்கியங்களிலும் பிற்போந்தவை களிலும், இக்கலை சிறப்பாக எவ்வாறு போற்றப் பெற்றது என்பதையும் மக்கள் உள்ளத்தில் இடங்கொண்டு வளர்ந்த தன்மையையும் கூறுதும்

மதுரைக் காஞ்சியில் "எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி நுண்ணிதினுணர்ந்த நோக்கிற் கண்ணுள் வினைஞர்" என்ற வரிகள் ஓவியர்களின் திறமையை உணர்த்தும் கட்டங் களில் கண்கவரும் சித்திரங்களைத் தீட்டுதல்[1] தமிழர் மரபு என்பதை மணிமேகலை ஆசிரியர் "சுடுநிலை ஓங்கிய நெடுநிலை மனைதொறும் மையறுபடிவத்து வானவர் முதலா எவ்வகை உயிர்களும் உவமங்காட்டி வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய கண்கவர் ஓவியர்" எனக் கலையையும் அவை காணப்பெறும் இடங்களையும் சிறப்பிக்கின்றார். மற்றோரிடத் தில் வண்ணம் தீட்டப்பெறாத அதன் ஓரியல்பை 'மனையகம் புகுந்து மணிமேகலை தான் "புனையா ஓவியம் போல் நிற்ற லும்" எனத் தெரிவிக்கின்றார்

சங்க காலத்தில் ஓவியக்கலை நூல்கள் இருந்தன என்பதற்கு

" நாடக மகளிர்க்கு நன்களம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூற்கிடக் கையும்
கற்றுத்துறைபோகிய பொற்றொடி நங்கை "

---

1 ஓவியம் வல்லார் கண்ணுள் வினைஞர் எனப்பட்டார். இத் தொடருக்கு நோக்குவார் கண்ணெதிரே தம் தொழிலை நிறுத்துவோர், என்று பொருள் என்பர் நச்சினார்க் கினியர்.

என்ற மணிமேகலை வரிகளும் பிறவும் சான்ருகும். இவ்வரிகளால் அக்காலத்தில் நடனக் கலை பயிலுவோருக்கு ஓவிய நூற் பயிற்சி வேண்டுமென்பதும் அம்மாணவர் அவ்வோவிய நூல்களைப் பயின்ருர்களென்பதும் அதனில் நடனத்திற்குரிய பலவகை நிலைகளை உணர்த்தும் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன என்பதும் தெரிகின்றன.

இன்னும் ஓவியத்தின் சிறப்பைப் பற்றிய பல குறிப்புக்களும் பல நூல்களில் இருக்கின்றன. பட்டினப் பாலையின் சில வரிகள், காவிரிப்பூம்பட்டினத்து அகன்ற தெருக்களில் பல தேர்கள் ஓடுகையினுலே எழுந்த தூளிகள் வேறுபட்ட சித்திரங்களையுடைய வெள்ளிய கோயில்களின் மேல் பொருந்துதலினுல் அவை புழுதியை மேலே பூசிக்கொண்ட யானையைப்போல அழுக்கேறித் தோன்றினவென்று கூறுகின்றன. பரிபாடல் ஒன்று, திருப்பரங்குன்றத்து முருகவேள் கோயிலின் ஓவியப் பண்புகளை விளக்கும். அங்கு சித்தரித்துள்ள பரிதியையும், அதனைச் சூழ நின்ற கோள்களையும், அகலிகையின் கதையை விளக்குவதற்கான மன்மதன் இரதி, பூனையாக உருவெடுத்த இந்திரன், அகலிகை கௌதமரின் தோற்றங்களையும் காணத் திரளான மக்கள் வந்தனர் எனக் கூறும். பரிபாடலின் மற்ருெரு செய்யுள் ஒரு வீட்டின் சுவரில் தீட்டிய புலியின் சித்திரத்தைக் கண்ட யானை வீரிட்டு ஓடிற்று எனக்கூறும். மதுரை நகரிலுள்ள பௌத்த சமணப் பள்ளிகளின் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன வென மதுரைக் காஞ்சி கூறும் நெடுநல்வாடை அரசனைப் பிரிந்திருந்த அரசி கவலையால் மாசுபடிந்த நூலாற் செய்த புடவையுடனே "வண்ணங்களைக் கொண்டு தீட்டப் பெருத சித்திரத்தை நிகர்த்தாள்" எனவும், அவள் படுத்திருந்த கட்டிலின் மேற்கட்டியின், மேலே புதிதாக எழுதப்பெற்ற "ஓவியத்தில் ஞாயிறு, ரோகிணி, மேட ராசிகள் மற்றும் கோள்கள் இருந்தன் எனவுங் காண்கிருேம். ஒரு வீட்டின் சுவர் முழுதும் உயிர் ஓவியங்கள் புனையப்பட்டிருந்தனவெனப் பெருங்கதை கூறும். சிந்தாமணியில் ஓரிடம், யானைகள். மான் கூட்டம், பறவைகள், தாமரைத் தடாகம் முதலியவை வனப்புறத் தீட்டப்பெற்றிருந்தன எனவும் அது வித்தகர் விளங்கும் கலைக்கூடமெனத் திகழ்ந்தது எனவுங் கூறுகிறது. நற்றிணையில் சில வரிகள், ஒரு பெண்ணின்

எழிலைக்கூறுமிடத்து அப்பெண் சுவரில் தீட்டிய ஓவியமென இருந்தாள் எனக் கூறும். மணிமேகலையில் இன்னும் சில வரிகள், வீடுகளின் சுவர்களில் தெய்வத் திருமேனிகளின் உருவங்களைத் தீட்டியிருந்தார்கள் எனவும் கூறும். சிலப்பதி காரம், யாழைத்தாங்கிய மாதவி, அதனில் இழைத்து வாசித்துப்பின், சோர்வடைந்து, சித்திர நூல்களிற் கூறிய ஒன்பது நிலைகளின் ஒன்றில் நின்றாள் எனக்கூறும். இன்னும் சித்திரம் எழுதப்பெறும் சாதனம் மரமாகில் பலகை என்றும். துணியாகில் படம், கிழி எனவும் தெரிகின்றது. சிலப்பதி காரம் மற்றோரிடத்தில், மாதவியின் நடன அரங்கின் மேற் கட்டியின்மீது பல அருமையான சித்திரங்கள் வரையப் பெற்றிருந்தன வெனக்கூறும். இவ்வாறாக ஓவியம் பற்றி வரும் சங்க நூற் சான்றுகள் கணக்கில. அவற்றால், சங்க காலத்தில் தமிழகத்தில் திருக்கோயில்களிலும், வீடுகளிலும் எங்கணும் சுவர் ஓவியங்கள் விளங்கின எனப்பெறும்.

மற்றும் சில நூற்களிற் சிறந்த சிந்தனை தோய்ந்த ஓவியங்களைப் பற்றிய குறிப்புக்களையும் காண்கிறோம். அவை கலைஞனின் மனத்துக் கண் ஒருப்பட்ட பின்னரே உருவாகும் என்பதனைச் சில பெரியார்களின் வாக்குகள் மெய்ப்பிக்கும். சுந்தரமூர்த்தி நாயனார் ஆரூரில், பரவையாரை முதல் முதலில் காண்கின்றார். தமது சிந்தை தயங்கிப் பல எண்ணுகின்றார். அவளது உருவம் பின்னும்,

" ஓவியம் நான்முகன் எழுத ஒண்ணாமை உள்ளத்தால்
மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ"[1]

என ஐயுறுகின்றார். குமரகுருபரர் மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழில் அம்மையை,

" எழுதாச் சொன்மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக்கிளியே "

எனப் பாடுகின்றார். அப்பர் சுவாமிகள் இறைவனை மனக் கண்களினால் கருத, " உயிராவணமிருந்து உற்றுநோக்கி உள்ளக்கிழியின் உருவெழுதி " நோக்கத் தோன்றுவான் எனக்கூறுவார். இக் குறிப்புக்கள் ஓவியரின் நுண்ணிய கருத்துக்கள் தோன்றிய பின்னரே, அவை உயிர்பெற்ற அருள் ஓவியங்களாக ஆகின்றன என்பதனை உணர்த்தும்.

---

1. பெரியபுராணம் 6. 140-1.

பல்லவர்கால ஓவியங்கள்.

சங்ககாலத்தில் தமிழ் நாட்டில் ஓவியக் கலை மக்கள் உள்ளத்தில் பல நூற்றாண்டுகளாகப் பதிந்திருந்தது. அவர்கள் வாழ்க்கையும் கலை வாழ்வாகத் திகழ்ந்தது என்னலாம். ஆனால் அவர்கள் அந்நாள் வாழ்ந்த நீள் மாடங்கள், அரசர் வாழ்ந்த அரண்மனைகள், இறைவன் திரு உருவங்கள் நிறைந்த கோயில்கள் யாவும் என்றும் நிலைபெற்றன வல்லவே! 1300 ஆண்டுகட்கு முற்பட்ட இப்பெரு மன்றங்கள் மண், மரம், செங்கல், சுண்ணாம்பால் ஆகியவையாகும். காலத்தின் போக்காலும் தட்ப வெப்ப நிலைகளாலும், இவைகள் காலன் வாய்ப்பட்டன. அக்கால ஓவியங்களின் இப்பல குறிப்புக்கள் தவிர ஏனையவை நமது நோக்கினுக்கு வாராமலே ஒழிந்தன.

ஆனால் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டில் இக்கலைகளுக்குப் புத்துயிர் கொடுக்கப் பல்லவப் பேரரசு தோன்றிற்று. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டது. இப்போது மகாபலிபுரம் என்ற மாமல்ல நகரம் அதன் துறைமுகப்பட்டினம். அதன் இரண்டாவது பேரரசன் மகேந்திரவர்மன் ஆவான். அவன் சிறந்த வீரன்; சமயப் பற்றுடையவன். அவன் என்றும் அழியாக் கடவுளுக்கு அழியாத தன்மைத்தான பொருள்களைக்கொண்டு திருக்கோயில் சமைக்க வேண்டுமென்று எண்ணிப் பாறைகளைக் குடைந்து அவற்றில் இறைவன் கோயில்களை அமைத்தான்.

அந்நூதன செயற்கரிய செயலால் அவன் விசித்ரசித்தன் எனப் பெயர் பெற்றான். அவன் அத்துடன் சித்திரக்காரப் புலியுமாயினன். அவன்தான் தோற்றுவித்த பல பாறைக் குகைக் கோயில்களில், அழியாத அழகு வாய்ந்த சித்திரங்களையும் நிரப்புவித்தான். அச் சித்திரங்கள், சித்தன்னவாசல், காஞ்சி-கயிலாசநாதர் கோயில், திருச்சிராப்பள்ளி, பனமலை இவற்றில் உள்ளன. அவற்றில் சித்தன்னவாசல் ஓவியங்களே முதன் முதலில் என்றும் அழியாத கற்பாறைகளின்மீது தீட்டப் பெற்றமையால் நமக்கு எஞ்சியுள்ள ஓவியங்களில் அவை மிகவும் பழமையானவையாகும். இவை 1920இல் முதன் முதலாக கோபிநாதராவ், டுப்ரே இவர்களால் கண்டுபிடிக்கப் பட்டு அறிஞர் உலகுக்கு வெளிப்படுத்தியவை. சித்தன்ன வாசல் சமண ஓவியங்கள் தமிழ்நாட்டு அஜந்தா என்னலாம். தொண்டைமான் புதுக்கோட்டைக்கு நேரே வடமேற்கே ஒன்பது மைலில் உள்ள ஒரு குக்கிராமம். அதில் ஒரு பெரும் செங்குத்தான மலையில் குடையப்பட்ட மண்டபம் உண்டு. அது சித்து அண்ணல் வாயில் என்ற பெயர் தாங்கிய சமண அருகரது கோயில். குகைக்கோயில் உள்ளே ஒரு சதுரமான

அறையும், வெளியே ஒரு நீண்ட தாழ்வாரமும் அமைந்தது. ஓவியங்கள் வரைந்துள்ள குகையின் மேற்பரப்புச் சமமாகப் பொளியப்பட்டுள்ளது அதன்மேல் சுண்ணும்புச் சாந்து தீட்டி. பின்னும் அதன்மேல் சுண்ணும்பு பூசி, அதை வழவழப்பாகத் தேய்த்து அது காய்வதற்குள் சித்திரங்களின் ரேகைகளும், வண்ணங்களும் தீட்டப்பட்டுள்ளன[1]! இவ்வாருக இக் குகை மண்டபம் எப்பாகமும் ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன. ஆனல் காலத்தின் கொடுமையும், மக்களின் அறியாத் தன்மையும் இதனை விட்டபாடில்லை. இவற்றில் அழிந்தவையும், பழுதுற்றவையும் போக. குகையின் உண்ணழிகை, நடுமண்டபம் இவற்றின் மேல்நிலை முகப்பில் உள்ள விட்டத்தின் மூன்று புறங்களில் மாத்திரமே சில இப்போதும் காணப்படுகின்றன.

நடு மண்டபத்தின் மேல் நிலையில் காண்பதே சிறந்த பகுதியாகும். இது தாமரையும், அல்லியும் நிரம்பிய ஓர் அழகிய குளம் இயற்கையைப் பழிக்கும் இவ்வோவியத்தில் தாமரை மலர்களும, மொட்டுகளும், கொடிகளும், இலைகளும் மற்றும் அல்லி, செங்கழுநீர் மலர்களும் அவற்றின் மொட்டு களும் உரிய வண்ணங்களில் தீட்டப்பெற்றுள்ளன. தாமரைக்

---

1. இதனை புனையா ஓவியம் என்பர் மேல் நாட்டு சித்திரக் காரர் வர்ணங்களும் கனிஜப்பொருள் தாவரப் பொருள் அல்ல. உபயோகப்பட்டுள்ள வர்ணங்கள் கருப்பு, பச்சை, மஞ்சள், நீலம், கிச்சிலி (பீதவர்ணம்) சிவப்பு, வெள்ளையாகும் இத்தகைய சித்திரங்கள் இத்தாலிய தேசங்களில் தோன்றுவதற்கு வெகு காலத்திற்கு முன்னரே நம் நாட்டில் சாதாரணமாக இருந்தது. 2ஆம் நூற்ருண்டில் தான் நமது மணிமேகலை 3ஆம் காதை 129-131 வரிகள்.

“எவ்வகை யுயிர்களு முவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவ ரோவியங் கண்டு” இதனை விளக்கும்.

இது ஓவியக் கலையில் கைத்தேர்ந்தவர்களால் சிருஷ்டியி லுள்ள எல்லாப் பொருள்களும் வெண் சுண்ணம் தீட்டப் பெற்ற சமமான பரப்பில் கண்கவரத்தக்கவாறு இயற்றப் பெற்றன என்பது பொருளாகும். ஓவியம் கிறித்து சகாப்தத்திற்கு முன்னும் பின்னுமாகப் பல நூற்ருண்டு களில் பயின்றுவந்த போதிலும் அவைகள் தீட்டப்பெற்ற செங்கற் சுண்ணும்புக் கட்டிடங்களும் மாளிகைகளும், காலவரையறையில் அழிந்தபோது இவ்வோவியங்களும் மறைவதாயின.

கயத்தில் பலவகை வெண்மீன்களும் மகரமும் ஊடுருவிச் செல்கின்றன. அன்னம் போன்ற பறவைகள் ஆணும் பெண்ணுமாகத் தத்தம் குஞ்சுகளுடன் இருந்து மகிழ்வன யானைகளும் மாடுகளும் நீரைக் கலக்கிக் களியாடுகின்றன. இவ்வுயிரினங்களின் இயற்கைத் தன்மை வரையப்பட்டுள்ள ஒவ்வொரு கோட்டிலும் கீற்றிலும் காண்பதாகும். இத் தாமரைத் தடாகம், சமணர் சுவர்க்கங்களில் ஒன்ருகிய சமவசரண மண்டபத்திற்குப் போகும் வழியிலுள்ள தாமரைத் தடாகத்தைக் குறிப்பது என்பர்.

இத் தடாகத்தில் ஒரு புறத்தில் கோவணந்தரித்துத் தொள்ளைக் காதுகளுடன் இரு மனிதர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் ஒருவர் தம் வலக் கையால் தாமரை மலரைக் கொய்கிருர். அவரது இடக்கையில் ஒரு பூக்குடலை தொங்குகிறது. மற்ருெருவர் தாமரை மலரைக் கொடியுடன் கொண்டு, சமண முத்திரையிட்டுக் காட்டுகின்ருர். மூன்ரும் மனிதரும் உளர். இம் மூவரிலும் வனப்பு வாய்ந்த உருவமுடையவர் மூன்ரும் மனிதரே. இவர் இடக்கையிலேந்திய தாமரை மலர்கள் கொண்ட கொடிகளினுடைய கற்றையை. இடத்தோளில் சார்த்திக்கொண்டு வலக்கையில் கொண்ட ஓர் அல்லி மலர்த்தண்டை வலத்தோளில் சார்த்திக்கொண்டு நிற்கிருர் இம் மூன்று உருவங்களின் வனப்பு, நிற்கும் நிலை, மேனியின் வடிவம், கண்களின் பார்வை பிடரியிலுள்ள கரிய தலைமயிர், நடுவில் வகிர்ந்திருக்கும் ஒழுங்கும், தாமரைத் தடாகமும் நமது மனத்தைக் கவர்வனவாகும்.

இங்குள்ள சிறந்த ஓவியங்களில் ஒன்று அர்த்த மண்டபத்தின் முகப்பில் தென்புறம் நிற்கும் தூணில் காணப்படுவதாகும். அழகிய நாடகக் கணிகை ஒருத்தி நடனம் செய்கிருள். இந்நடிகை தன் இடது கையை கஜஹஸ்த நிலையில் உடலுக்குக் குறுக்கே தொங்கவிட்டு தனது வலது கையை மடக்கி அக்கையால் அழகுபெற அபய முத்திரை காட்டுகிருள். வடப்புறம் நிற்கும் தூணின் மேற் சதுரத்தின் முன் புறத்தில் மற்ருெரு நாட்டியக்காரி தோன்றுகிருள். இவள் நிருத்தத்தில் இடது கையை ரேசிதமாக நீட்டி வலது கையை மடக்கி அக்கையால் அபய முத்திரை காட்டி உடலைப் பங்கித்து நிற்கிருள். இவ்விரு நடிகையரும் நாட்டியக் கச்சணிந்து பல அணிகலன்களைப் பூண்டு, கைகளில், வளையல்கள் காப்புகள், முழங்கைக்கு மேல் கடகம், கழுத்தில் பலவித மணி மாலைகள், காதுகளில் ஓலைகள், (பத்ர குண்டலங்கள்) கொண்டையிட்ட கூந்தலில் தாழை மடல்கள் சுட்டி முதலிய அணிகள் இவற்றைத் தரித்துள்ளனர். பொன்னிறமான மேனியின் அழகு, குறுகிய இடை, உடலின் பாங்கு, பாம்பைப்

போல் நெளியும் கரங்கள், கண்களின் ஒளி ஆகிய யாவும் ஒருங்கு சேர்ந்து உயிர்க்களை ததும்பும், இவ்விரு ஓவியங்கள் தேவ கன்னியரை நமக்கு நினைப்பூட்டுகின்றன. இவ்விரு நடிகைகளும் உயிர்பெற்ற இசைக்கு ஏற்ப இயங்குவது போல், நம் முன் தோன்றுகின்றனர்.

தென்புறத் தூணின் மேற் சதுரத்தில் மற்றொரு சிறந்த ஓவியம் காணப்படுகிறது. கம்பீரத் தோற்றமுடைய ஒரு அரசனும், அவன் பின்னர் அவன் மனைவியும் கோயிலை நோக்கிச் செல்வது போல் சித்தரித்துள்ளன. அரசன் மணிமுடிதரித்துக் காதுகளில் ஒன்றில் மகரக் குழையும், மற்றொன்றில் ஓலையும் தரித்துப் பல அணிகலன்களைப் பூண்டுள்ளான். அரசியின் கூந்தல் தலைமீது கொண்டையிடப்பட்டுள்ளது. அரசனின் தோற்றம் காஞ்சி ஆதிவராகர் கோயிலுள்ள முகத்தைப் பெரிதும் ஒத்துள்ளதாதலின் இங்குளளது இக்குகைக் கோயிலைக் குடைவித்த மகேந்திர வர்மனது தோற்றமே என அறிஞர் கூறுவர்.

மேற் குறிப்பிட்டவை தவிர, மற்றும் உட்புறமெங்கும் பலவண்ணச் சித்திரங்களே இருக்கின்றன. எங்கும் தாமரை, அல்லி மலர்கள், வளைவான தாமரைக் கொடிகள் இலைகள். இரு ஓரங்களிலுமுள்ள இரண்டு மகரங்களின் வாய்களிலிருந்து கிளம்புகின்றன இன்னும் பல கோலங்கள் அன்னப் பறவைகள் யாவும் இயற்கைக்கு ஒத்து அழகு செய்வன இச்சுவர் ஓவியங்கள் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டு ஓவியக்கலையை உலகிற்கு உணர்த்தும் ஆற்றல் பெற்றுள்ளன ஓவியக் கலையிலும் மற்றுமொரு சிறப்பு அஃதாவது நடனக் கலையையும் இவை சித்தரிக்கின்றன இக் குகைக்கோயில்கள் சமணர் கோயிலாதலின் பல தீர்த்தங்கரர் உருவச் சிலைகளும் இங்கு அழகுறத் திகழ்கின்றன. ஆகவே சித்தன்னவாசல், ஓவியம், சிற்பம், நடனம் என்னும் முக்கலைகளையும் சிறப்பிக்கும் கலைக்கூடமாக விளங்குவதாகும்.

(தொடரும்)

சித்தன்னவாசல் ஓவியங்கள் அக்குடவரைக் கோயில் குடைந்ததும் உடனடியாக 7ஆவது நூற்றாண்டில் ஒருமுறையும், 9-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தின் இப் பல்லவ நாடு பாண்டியர் வசமாகி அவனிபசேகர சீவல்லப பாண்டியன் கீழ் இருக்கும்போது மதுரை ஆசிரியர் என்ற இளம் கௌதமனால் இக் குகைக் கோயில் முக மண்டபத்துடன் அறிவர் கோயில் எனப் பெரிதாக்கி அதன் மண்டபம் தூண்களில் மறு முறையும், சுண்ண வெண்சாந்தின் மேல் தீட்டிய பல வர்ண ஓவியங்களே இப்போது காண்பன என அறிஞர் கே. ஆர். சீநிவாசன், டாக்டர் பரமசிவம் கருதுகின்றனர்.

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழக
31-ஆம் ஆண்டு தொடக்க விழா.

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் 31 ஆம் ஆண்டுத் தொடக்க விழா, திருவள்ளுவ ராண்டு 2000 ஆடித் திங்கள் 29 ஆம் நாள் (13—8—69) புதன்கிழமை பிற்பகல் 4 30 மணியளவில் தமிழ்ச் சங்கப் பெரு மன்றத்தில் கழகத் தலைவர் பேராசிரியர் J. R. **செயச்சந்திரன்**, எம் ஏ (வரலாறு): எம். ஏ. (தமிழ்) டி. பி. ஈ டி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தஞ்சை மருத்துவக் கல்லூரி மதிப்பியல் பேராசிரியர், டாக்டர் **L. சிவராமன்**, F R C.S. (Eng.) அவர்கள் **இலக்கிய இன்பம்** என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். சங்க இலக்கியங்களிலிருந்தும் பிற்கால இலக்கியங்களிலிருந்தும் சுவையான பல சிறந்த கருத்துக்களை டாக்டர் சிவராமன் அவர்கள் எடுத்துரைத்தார்கள். மாணவச் செயலாளர் நன்றி நவில, கூட்டம் இனிது முடிவுற்றது.

❖ ❖ ❖

உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி
29-ஆம் ஆண்டு மாணவர் மன்றத் தொடக்க விழா

20—9—69 சனிக்கிழமையன்று மாலை 4–30 மணியளவில் விழா தொடங்கியது. மாணவர் மன்றத் தலைவர் வரவேற்புரை நிகழ்த்தினர். விழாவிற்கு திரு. J. R. **செயச்சந்திரன்** (கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வர்) அவர்கள் தலைமை யேற்ருர்கள். திரு **இரா. அரங்கசாமி**, B. SC., B. L. (பொரு ளாளர், மேலாளர், அரண்மனை தேவத்தானம் தஞ்சாவூர்) அவர்கள் "குறள்நெறி" எனும் தலைப்பில் சொற்பெருக்காற்றி ஞர்கள், விழாத்தலைவர் தம்முரையில் இக்கால மாணவர்கள் பின்பற்றி நடக்க வேண்டிய முறைகளைச் சிறப்பாக எடுத்துக் கூறினர்கள். 'குறள் நெறி" கூறிய சொற்பொழிவாளர், கற்க என்பதற்கும் அதன்படி நிற்க என்பதற்கும் உள்ள பொருள் ஆழத்தையும், ஆங்காங்கே வள்ளுவப் பெருமகனர் காட்டி யுள்ள, ஆன்மீக, பொருளாதார நெறிகளையும் பல சுவையான கதைகளையும் பிறவற்றையும் தெளிவாக எடுத்துக்கூறினர்கள். இறுதியாக மாணவர் மன்றச் செயலாளர் நன்றிகூற கரந்தைத் தமிழ்ச்சங்க வாழ்த்தோடு நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

கையறவு

வித்துவான், **வை. சுந்தரேச வாண்டையார்** அவர்கள் **4—9—69** அன்று இயற்கை யெய்தினார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறையில் ஆராய்ச்சியாளராய்ப் பணிபுரிந்து, ஓய்வு பெற்றிருந்தார்கள். அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் நெடுநாள் தொடர்புடையவர்கள். அவர்களின் கட்டுரைகள் பல தமிழ்ப் பொழிலில் வெளிவந்துள்ளன. சிறப்பாகக் கல்வெட்டாராய்ச்சியில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார்கள். அன்னாரின் மறைவிற்குப் பெரிதும் வருந்துகிறோம். அவரின் இன்னுயிர் இறையடி நிழலில் பேரின்பம் எய்துமாக.

* * * * *

திருத்தம்.

தமிழ்ப் பொழில் சௌமிய—ஆடி இதழில் 118-ஆம் பக்கம் 30-ஆவது வரியில் 'ஆனி மாதம் 20, 21-ஆம் தேதிகளில்' என்றிருப்பதை 'வைகாசி மாதம் 22, 23-ஆம் தேதிகளில்என்றும், 119-ஆம் பக்கம் 11-வது வரியில் 'ஆனித்திங்கள் 19-ஆம் நாள்'' என்றிருப்பதை 'ஆடித் திங்கள் 3-ஆம் நாள்' என்றும் திருத்திக்கொள்ளவும்.